முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

2026-ம் வருடம் ஏப்ரல் மாதம் 16-ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண் : 09/2017**

*(CNR No.TNSV01000043/2017)*

****

(முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரைக்குடி முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.24/2015, காரைக்குடி இரயில்வே காவல்நிலைய குற்ற எண்.19/2025)

தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,
காரைக்குடி இரயில்வே காவல்நிலைய
குற்ற எண்.19/2025 . . . குற்ற முறையிடுபவர்

/எதிரிடை/

1. *T*.வீரசோழன் (48/2015),
 த/பெ.தங்கவேல்,
 114 பிடாரிக்கட்டளை தெரு,
 வடமலை, மணக்காடு,
 வேதாரண்யம் தாலுகா,
 நாகப்பட்டிணம் மாவட்டம்.

2. ராஜா @ பாரதிராஜா (21/2015),
 த/பெ.பன்னீர்செல்வம்,
 81 புதுக்கரை,
 பாசிப்பட்டிணம்,
 திருவாடனை தாலுகா,
 இராமநாதபுரம் மாவட்டம்.

3. வசந்தி (35/2015),
 க/பெ.கிருஷ்ணமூர்த்தி,
 கதவு எண்.1052,
 மதுரை மெயின் ரோடு,
 நமணசமுத்திரம்,
 திருமயம் தாலுகா,
 புதுக்கோட்டை மாவட்டம். . . .எதிரிகள்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:33:49 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>காரைக்குடி இரயில்வே காவல்நிலைய<br>குற்ற எண்.19/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1. *T*.வீரசோழன் (48/2015),<br>த/பெ.தங்கவேல்,<br>114 பிடாரிக்கட்டளை தெரு,<br>வடமலை, மணக்காடு,<br>வேதாரண்யம் தாலுகா,<br>நாகப்பட்டிணம் மாவட்டம்.<br><br>2. ராஜா @ பாரதிராஜா (21/2015),<br>த/பெ.பன்னீர்செல்வம்,<br>81 புதுக்கரை,<br>பாசிப்பட்டிணம்,<br>திருவாடனை தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம்.<br><br>3. வசந்தி (35/2015),<br>க/பெ.கிருஷ்ணமூர்த்தி,<br>கதவு எண்.1052,<br>மதுரை மெயின் ரோடு,<br>நமணசமுத்திரம்,<br>திருமயம் தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரிகள் மீது பிரிவு *174 Cr.P.C. @* இதச பிரிவுகள் 120(பி), 449, 302, 201, 203, 342 உ/இ 34. |
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | 1-வது, 2-வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302 மற்றும் 3-வது எதிரி மீது 120(பி), 449, 201, 203, 302-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகள் வாதுரை | : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்மானம் | : | ***இறுதியாக,*** 1-வது, 2-வது எதிரிகள் இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302-ன் கீழும் மற்றும் 3-வது எதிரி 120(பி), 449, 201, 203, 302-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:33:55 +0530

*16.04.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

இவ்வழக்கு கற்றறிந்த முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரைக்குடி முன்னிலையில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.24/2015 என்று கோப்பில் எடுக்கப்பட்டு கு.வி.மு.ச 209 பிரிவின் கீழ் மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் 27.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.A.அழகர்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 1-வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.*S.*விஸ்வநாதன் முன்னிலையாகியும், 2-வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.*A.*பாண்டிகண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 3-வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.*K.*ரெங்கசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் . . .

**<u>தீ ர் ப் பு ரை:-</u>**

இவ்வழக்கில், 1-வது எதிரி வீரசோழன் என்பவர் HP கேஸ் சிலிண்டர் வழங்கும் லாரியின் ஓட்டுநர் என்றும், இவர் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் தாலுகா, வடமலை மணக்காடு எண்.114 பிடாரிகரை தெருவைச் சேர்ந்தவர் என்றும், 2-வது எதிரி ராஜா என்ற பாரதிராஜா இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், பாசிப்பட்டினம் எண்.81, புதுக்கரையைச் சேர்ந்தவர் என்றும், தற்போது *HP* கேஸ் சிலிண்டர் குடோன் அருகில் அறை எடுத்து தங்கி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பெருமாநாட்டில் இருக்கும் சுதர்சன் கலை மற்றும் அறிவியல்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:34:01 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

கல்லூரியில் *BBA* மூன்றாம் ஆண்டு படித்து வருவதாகவும், 1-வது எதிரியின் நெருங்கிய நண்பர் என்றும், 3-வது எதிரி வசந்தி மதுரை ரோடு நமணசமுத்திரத்தைச் சேர்ந்தவர் என்றும், மேற்படியார் இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தியின் மனைவி என்றும், கிருஷ்ணமூர்த்தி வைத்திருக்கும் மளிகைக்கடை, டீக்கடையை 3-வது எதிரி பார்த்துக்கொள்வார் என்றும், இளஞ்சிறார் அன்புக்கரசி மதுரை ரோடு நமணசமுத்திரத்தைச் சேர்ந்தவர் என்றும், மேற்படியார் இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தி மற்றும் 3-வது எதிரியின் மூத்த மகள் என்றும், 1-வது எதிரி மதுரையிலிருந்து புதுக்கோட்டைக்கு *HP* கேஸ் லோடு கொண்டுவரும் போதெல்லாம் 3-வது எதிரியின் டீக்கடைக்கு வந்தும், இவர்களுக்கு தேவையான சமையல் கேஸ் ஏற்றிக் கொடுத்தும் பழக்கம் ஏற்பட்டு தொடர்பு நெருக்கமாகி கணவர் கிருஷ்ணமூர்த்தி இல்லாத சமயத்தில் 3-வது எதிரியுடன், 1-வது எதிரி வீட்டில் தனியாக தங்கி செல்லும் அளவுக்கு தொடர்பு நெருக்கமாகி உள்ளது என்றும், இதனை அறிந்து கிருஷ்ணமூர்த்தி, 3-வது எதிரியை கண்டித்துள்ளார் என்றும், இளஞ்சிறார் அன்புக்கரசி 11-ம் வகுப்பு படித்து வருபவர் என்றும், இவர் பள்ளிக்கு செல்லும்போது ஆண் நண்பர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு பூங்கா, கோவில். சினிமா என்று சுற்றித் திரிவதை அப்பா கிருஷ்ணமூர்த்தி பார்த்து மேற்படி இளஞ்சிறார் அன்புக்கரசியை கடுமையாக கண்டித்துள்ளார் என்றும், மேற்படி 3-வது எதிரி மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசியையும் கிருஷ்ணமூர்த்தி கண்டித்ததால் மன வெறுப்படைந்து மேற்படி எதிரிகள் 1-வது எதிரியிடம் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்தால் தான் நிம்மதியாக இருக்க முடியும் என்று கூட்டுச் சதி செய்து முடிவு

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:34:06 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

செய்துள்ளனர் என்றும், இந்நிலையில் 25.02.2015-ம் தேதி நமணசமுத்திரத்தில் மதுரை மெயின் ரோட்டில் உள்ள கிருஷ்ணமூர்த்தி வீட்டின் ஹாலில் தூங்கிக் கொண்டிருந்த போது ஏற்கனவே முடிவு செய்தபடி, இளஞ்சிறார் அன்புக்கரசி செல்போன் மூலம் 1-வது எதிரிக்கு மிஸ்டுகால் கொடுத்தும் 1-வது எதிரி கையில் இரும்பு கம்பியுடனும், 2-வது எதிரியும் 1-வது எதிரி அழைத்ததன் பேரில் அன்று இரவு சுமார் 10.45 மணிக்கு வந்து கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, 1-வது எதிரி உறங்கிக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் தலையணையால் அமுக்கியும், 2-வது எதிரி கிருஷ்ணமூர்த்தியின் கால்களை எங்கும் நகரவிடாமல் பிடித்துக் கொண்டும், மீண்டும் 1-வது எதிரி இரும்புக் கம்பியால் கிருஷ்ணமூர்த்தியின் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தி கொலை செய்துள்ளார் என்றும், அப்போது 3-வது எதிரியும் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசியும் வீட்டின் கதவை வெளியில் பூட்டி ஆட்கள் யாரும் வருகிறார்களா என பார்த்துக் கொண்டு இருந்துள்ளார்கள் என்றும், மேற்படி 1 முதல் 3 எதிரிகளும் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து விட்டு மேற்படி குற்றத்திற்கான தண்டனையிலிருந்து மேற்படி எதிரிகளை மறைக்கும் உட்கருத்துடன் மேற்படி குற்றம் செய்யப்பட்டதற்கான சாட்சியத்தை மறைக்கும்படி வீட்டிலிருந்த கிருஷ்ணமூர்த்தியின் சடலத்தை மேற்படி 1 முதல் 3 எதிரிகளும் வீட்டிற்கு பின்னால் திருமயம் இரயில் நிலையத்திலிருந்து புதுக்கோட்டை இரயில் நிலையத்திற்கு இடையே கி.மீ.464/1-2 என்ற இடத்தில் போட்டும், அதன் பின்பு எதிரிகள் தாக்கியதால் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் தலையில் இருந்து வழிந்த இரத்தக்கரையை தண்ணீர் ஊற்றி வீட்டை கழுவி சுத்தம் செய்து

தடயங்களை மறைத்தும், மேலும் 3-வது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து விட்டு மனநிலை சரியில்லாததால் இரயிலில் அடிபட்டு இறந்துவிட்டதாக பொய்யான தகவலை கொடுத்துள்ளார் என்றும், 1-வது எதிரி இதச பிரிவுகள் 120(பி), 449, 302, 201-படியும், 2-வது எதிரி இதச பிரிவுகள் 120(பி), 449, 302, 342, 201 மற்றும் 3-வது எதிரி இதச பிரிவுகள் 120(பி), 302, 201, 203 உ/இ 34-படியும் தண்டிக்கத்தக்கவர்கள் என்று காரைக்குடி, இரயில்வே காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரிகள் கற்றறிந்த முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், காரைக்குடி அவர்கள் முன்பாக முன்னிலையான போது, எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், மேற்படி எதிரிகள் மீதான குற்றங்கள் சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் கு.வி.மு.ச பிரிவு 209-ன் கீழ் வழக்குக் கோப்பு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது 1-வது, 2-வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302-ன் கீழும், 3-வது எதிரி மீது 120(பி), 449, 201, 203, 302-ன் கீழும் குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கத்தக்கக் காரணம் உள்ளது என்று முடிவு செய்து, கடந்த 24.10.2017 அன்று 1-வது, 2-வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302-ன் கீழும், 3-வது எதிரி மீது 120(பி), 449, 201, 203, 302-ன் கீழும் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228(1)(ஆ)ன் கீழ் மேற்படி

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:34:16 +0530

எதிரிகளிடம் குற்றச்சாட்டுக்களை தமிழில் படித்துக்காட்டி விளக்கிக் கூறியபோது 1-வது, 2-வது எதிரிகள் இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302 மற்றும் 3-வது எதிரி இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 203, 302-ன் கீழான குற்றங்களை மறுத்துரைத்து, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறி விசாரணை கோரினார்கள். எனவே, இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 231-ன் கீழ் அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**4)** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.23 வரையிலான சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.29 வரையிலான சான்றாவணங்களும் அ.சா.பொ.I முதல் அ.சா.பொ.VII வரையிலான சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

*i)* அசா.1 சிங்கம்மாள் தனது சாட்சியத்தில், 3-வது எதிரியை தனக்கு தெரியும் என்றும், தான் கூலி வேலை செய்து வருவதாகவும், தனக்கு நான்கு மகன்கள், மூன்று மகள்கள் இருப்பதாகவும், தனது மகன் கிருஷ்ணமூர்த்திக்கு 3வது எதிரியான வசந்தியை திருமணம் செய்து வைத்ததாகவும், அவர்களுக்கு அன்புக்கரசி, அபிராமி, பவித்ரா என மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர் என்றும், தனது வீட்டின் விஷேசங்களுக்கு அவர்கள் வருவார்கள் என்றும், 26.02.2015-ம் தேதி காலை 8.00 மணிக்கு தனது தம்பி மாணிக்கம், தனது மகன் கிருஷ்ணமூர்த்தி விபத்திற்கு உள்ளானதாக போன் மூலமாக தகவல் சொன்னதாகவும், தான் தனது மற்ற மகன்களான செந்தில், ராஜகுமார் ஆகியோர்களுடன் நமணசமுத்திரம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:34:22 +0530

வந்ததாகவும், கிருஷ்ணமூர்த்தி உடலை திருமயம் மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு சென்று விட்டதால் தான் திருமயம் சென்றதாகவும், பின் இறந்தவரது உடலை தனது சொந்த ஊரான சத்திரப்பட்டிக்கு கொண்டு சென்று எரித்து விட்டதாகவும், தான் 2.1/2 மாதங்களாக துக்கத்தில் இருந்ததாகவும், தனது மூத்த பேத்திகளான அபிராமி மற்றும் அன்புக்கரசி ஆகியோர் அவரது தகப்பனார் கிருஷ்ணமூர்த்தி விபத்தில் இறக்கவில்லை என்றும், அம்மாதான் ஆட்களை வைத்து, அப்பாவை கொலை செய்து விட்டதாக கூறினார்கள் என்றும், தான் பேத்திகளையும், மகன்களையும் அழைத்துக்கொண்டு 15.05.2015 அன்று திருச்சி ஜங்சன் காவல் அதிகாரியிடம் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும், விசாரணையில் 3-வது எதிரி வசந்திதான் ஆட்களை வைத்து தனது மகன் கிருஷ்ண மூர்த்தியை கொலை செய்து விட்டது தெரிய வந்தது என்று வாக்குமூலம் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

*ii)* அசா.2 அபிராமி தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி தனது அப்பா என்றும், தனது அம்மா தான் 3வது எதிரி என்றும், தனக்கு அன்புக்கரசி என்ற மூத்த சகோதரியும், பவித்ரா என்ற இளைய சகோதரியும் உள்ளனர் என்றும், தான் சம்பவ சமயத்தில் புதுக்கோட்டையில் உள்ள ராணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 9-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்ததாகவும், தனது மூத்த சகோதரி அன்புக்கரசி அதே பள்ளியில் 11-ம் வகுப்பு படித்து வந்தார் என்றும், தனது இளைய சகோதரி புதுக்கோட்டை இருதய மேல்நிலைப்பள்ளியில் 7-ம் வகுப்பு படித்து வந்தார் என்றும், தனது அப்பா நமணசமுத்திரத்தில் மளிகைக் கடையும், டீக்கடையும் வைத்து

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:34:28 +0530

தொழில் செய்து வந்ததாகவும், தனது தாயார் தனது தந்தைக்கு உதவியாக கடையில் இருப்பார் என்றும், 1-வது எதிரி வீரசோழன் என்பவர் கடைக்கு சிலிண்டர் போட அடிக்கடி வரும்போது தனது அம்மாவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது என்றும், இது தனது தகப்பனாருக்கு தெரிந்ததால் அடிக்கடி தனது அப்பாவுக்கும், அம்மாவுக்கும் சண்டை ஏற்பட்டது என்றும், 25.02.2015-ல் இரவு 11.30 மணியளவில் தாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது தனது அப்பா அபி, அம்மு, பவித்ரா தன்னை யாரோ கொல்ல வருகிறார்கள் என கத்தினார் என்றும், தான் எழுந்து பார்க்கும் போது தானும் தனது தங்கை பவித்ரா மட்டும் வீட்டில் இருந்ததாகவும், அவர்கள் கத்தி வீட்டு கதவை திறக்கச் சொன்னதாகவும், அந்த சமயம் அவர்கள் வீட்டினுள் இருந்ததாகவும், 1, 2 எதிரிகள் சத்தம் போடாதீர்கள் என்றும் சத்தம் போட்டால் உங்கள் அப்பாவை போல உங்களையும் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்றும், தனது தந்தையின் முகத்தில் தலையணையை வைத்து வீரசோழன் அழுத்தினார் என்றும், ராஜா என்பவர் காலை பிடித்துக் கொண்டதாகவும், கிருஷ்ணமூர்த்தி தள்ளிவிட்டுக் கொண்டு எழும்பொழுது வீரசோழன் இரும்பு ராடால் கிருஷ்ணமூர்த்தியின் தலையில் அடித்ததாகவும், அதன் பின் கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து சத்தம் இல்லை இறந்துவிட்டார் என்றும், அதன் பின் தனது அம்மாவிற்கு வீரசோழன் போன் செய்து கதவை திறங்க கிருஷ்ண மூர்த்தி இறந்துவிட்டார் என்று சொல்லியதும் தனது அம்மா கதவை திறந்து விட்டதாகவும் தனது அம்மாவுடன் தனது அக்கா இருந்தார் என்றும், தனது அம்மா தாங்கள் யாரும் சத்தம் போட்டால் அப்பாவை போல் அடித்துக் கொன்று விடுவோம் என மிரட்டினார் என்றும், வீட்டிலிருந்த டேபிளில் தனது அப்பாவை வைத்து ரத்தம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:36:05 +0530

படிந்திருந்த அவரது ஆடைகளை மாற்றினார்கள் என்றும், எதிரிகள் மூவரும் சகோதரிகளான தங்கள் மூவரையும் மொட்டை மாடியில் அடைத்து விட்டு வெளியில் யாரும் சொல்லக்கூடாது என்றும் அவ்வாறு சொன்னால் உங்கள் அப்பாவை போல் தங்களையும் கொன்று விட்டு அப்பா இறந்த துக்கத்தில் தாங்களும் இறந்துவிட்டதாக வெளியில் சொல்லி விடுவோம் என எதிரிகள் மூவரும் மிரட்டினார்கள் என்றும், தனது அப்பாவை அடிக்க பயன்படுத்திய இரும்பு ராடு அ.சா.ஆ.1 என்றும், தனது அப்பாவின் முகத்தில் வைத்து அழுத்திய தலையணை அ.சா.ஆ.2 என்றும், சம்பவ சமயத்தில் தனது அப்பா உடுத்தியிருந்த வேட்டி அ.சா.ஆ.3 என்றும், சட்டை அ.சா.ஆ.4 என்றும், சம்பவ சமயத்தில் தனது தந்தை அணிந்திருந்த துப்பட்டா அ.சா.ஆ.5 என்றும், தனது தந்தையை வைத்து தூக்கிச்சென்ற மர பெஞ்சு அ.சா.ஆ.6 என்றும், மரபெஞ்சில் இருந்த தனது தந்தையை எங்கு தூக்கிச் சென்றார்கள் என்று தெரியாது என்றும், அப்போது தனது தந்தை இறந்து விட்டார் என்றும், அரை மணி நேரம் கழித்து மூவரும் திரும்பி வந்தார்கள் என்றும், அதன் பின்னர் இரத்தம் படிந்திருந்த ஆடைகளை ஒரு சாக்கு பையில் கட்டினார்கள் என்றும், எதிரி வீரசோழன் வெள்ளைக் கலரில் பவுடரும் எலுமிச்சம்பழமும் கொண்டு வந்து தண்ணீரில் கலந்து வீட்டில் ரத்தம் படிந்திருந்த இடத்தை கழுவினார் என்றும், பின்னர் எதிரிகள் மூவரும் விஷயத்தை வெளியில் சொல்லக்கூடாது என தங்களை மிரட்டினார்கள் என்றும், அதிகாலை 03.00 மணியளவில் சாக்குப் பையை எடுத்துக் கொண்டு 1, 2 எதிரிகள் வெளியில் சென்று விட்டார்கள் என்றும், அவர்கள் அனைவரும் தூங்காமல் விழித்திருந்ததாகவும், பின் காலை 06.00 மணியளவில் தனது தாயார் 3வது எதிரி

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:36:13 +0530

தங்களை பார்த்து நீங்கள் எப்பொழுதும் போல் பள்ளிக்கு கிளம்பி செல்லுங்கள் என கூறியதாகவும், தாங்கள் மூவரும் கிளம்பினோம் என்றும், ஆனால் தனது அக்காவும் தனது தங்கை மட்டும் தான் பள்ளிக்கு சென்றார்கள் என்றும், தான் வீட்டிலேயே இருந்துவிட்டேன் என்றும், கடையில் அப்பாவை காணவில்லை என அம்மாவுக்கு துணையாக வீட்டில் இருக்குமாறு சொன்னதால் தான் பள்ளிக்கு செல்லவில்லை என்றும், காலை 08.30 மணியளவில் கடைக்கு டீ குடிக்க வந்தவர்கள் இரயில் பாதையில் யாரோ இறந்துக் கிடக்கிறார்கள் என சொன்னார்கள் என்றும், கடைக்கு டீ குடிக்க வந்தவர்கள் தனது அம்மாவை இரயில் பாதைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், தனது தந்தை இரயில் பாதையில் இரயில் ஏறி இறந்து விட்டதாக தனது தாய் பலரிடம் கூறினார் என்றும், தன்னையும் தனது தந்தை இறந்து கிடந்த அந்த இரயில் பாதைக்கு அங்கிருந்தவர்கள் அழைத்துச் சென்றார்கள் என்றும், அங்கிருந்தவர்கள் ரயிலில் அடிபட்டு தனது தந்தை இறந்து விட்டதாக சத்திரப்பட்டியில் உள்ள தனது தாத்தா பாட்டி வீட்டிற்கு தகவல் சொன்னார்கள் என்றும், தன்னையும், தனது தங்கை, அக்காவையும் யாரிடமும் விடாமல் தனது தாய் வைத்திருந்தார் என்றும், ஊரிலிருந்து வந்த தாத்தா, பாட்டியிடமும் தங்களை பேச விடவில்லை என்றும், காரைக்குடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் தனது அப்பா எப்படி இறந்தார் என விசாரித்தார்கள் என்றும், தனது தாயார் தங்கள் யாரையும் பேச விடாமல் அவர் மட்டும் பேசினார் என்றும், பின்னீடு தனது தந்தையின் உடலை சடலக் கூறாய்வு செய்வதற்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பிரேத பரிசோதனை முடிந்த பிறகு தனது தந்தையின் உடலை தனது தாத்தாவும், பாட்டியும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:36:20 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

வேண்டுமென ஊரில் தான் அடக்கம் செய்ய சத்திரப்பட்டிக்கு எடுத்து சென்று விட்டார்கள் என்றும், தனது தாயார் தங்களை சத்திரப்பட்டிக்கு செல்ல விடவில்லை என்றும், அதன் பின்னீடு தாங்கள் நமனசமுத்திரத்தில் உள்ள வீட்டில் தான் இருந்ததாகவும், அதன் பிறகும் 1வது எதிரி அடிக்கடி தங்கள் வீட்டிற்கு எப்போதும் வந்து போவது போல் வந்து போனார் என்றும், தனது அக்கா அதை எதிர்த்துக் கேட்டதற்கு தனது அக்காவையும் அப்பாவைப் போல கொன்று விடுவோம் என தனது தாயார் மிரட்டியதாகவும், இதனால் பயந்து தனது அப்பா இறந்ததிலிருந்து 3 மாதம் கழித்து தனது அக்கா தாத்தா வீடான சத்திரப்பட்டிக்கு சென்று விட்டதாகவும், அக்கா சென்ற இரண்டு நாட்கள் கழித்து தானும் சத்திரப்பட்டிக்கு சென்று விட்டதாகவும், தானும் தனது அக்காவும் அப்பாவை அம்மா ஆட்கள் வைத்து கொன்று விட்டதாக தாத்தா, பாட்டியிடம் சொல்லிவிட்டதாகவும், அதன் பின்னீடு தாத்தாவும் பாட்டியும் தங்களை திருச்சிக்கு அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு தனது மகனை கொன்று விட்டதாக தாத்தாவும் பாட்டியும் மனு கொடுத்தார்கள் என்றும், பின் காரைக்குடிக்கு அழைத்துச் சென்று அங்கும் என்ன நடந்தது என விசாரித்தார்கள் என்றும், பின் ஒரு மாதம் கழித்து திருப்பத்தூர் கோர்ட் நீதிபதியிடம் நடந்த விபரம் குறித்து இரகசிய வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், தன்னைப் போலவே தனது பாட்டி சிங்கம்மாளும் தனது தங்கை பவித்ராவும் நீதிபதியிடம் ரகசிய வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*iii)* அசா.4 செந்தில்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 26.02.2015 அன்று காலை 09.00 மணியளவில் தனது தாயாருக்கு புதுக்கோட்டையிலிருந்து தனது மாமா மாணிக்கம் என்பவர் போனில் இரயில்வே ட்ராக்கில் கிருஷ்ணமூர்த்தி இறந்து

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:36:28 +0530

கிடப்பதாக தகவல் சொன்னார் என்றும், தான், தனது தாய் தந்தையர், தனது தம்பி, தனது அக்கா ராஜேஸ்வரி, விஜயா, முத்துலெட்சுமி ஆகியோர் இரயில்வே ட்ராக்கில் சென்று பார்த்தபோது கிருஷ்ணமூர்த்தி பிரேதம் இருந்தது என்றும், காரைக்குடி போலீசார் வந்து கிருஷ்ணமூர்த்தி பிரேதத்தை திருமயம் எடுத்து சென்றார்கள் என்றும், அங்கிருந்து கிருஷ்ணமூர்த்தியின் பிரேதத்தை மருத்துவமனையிலிருந்து பெற்று சத்திரப்பட்டி கொண்டு சென்று நல்லடக்கம் செய்தோம் என்றும், அதன் பின்னீடு 12.05.2015 அன்று மாலை 05.00 மணியளவில் ஊரணிபுரத்தில் அன்புக்கரசி நிற்பதாகவும் வந்து தன்னை வீட்டிற்கு அழைத்து செல்ல சொல்லி போன் செய்ததாகவும், அதன்பேரில் அழைத்து வந்தேன் என்றும், அன்புக்கரசி தனது அப்பா கிருஷ்ணமூர்த்தியை தனது தாயார் தான் கொலை செய்தார் என்றும் அவர் விபத்தில் இறக்கவில்லை என்று கூறினார் என்றும், அதன் பின்பு 3 நாட்கள் கழித்து தனது அண்ணனின் 2வது மகள் அபிராமியும் ஊருக்கு வந்து அன்புக்கரசி சொன்ன செய்தியையே சொல்லியதாகவும் அதன்பின் தனது தாயார், அன்புக்கரசி, தன் தம்பி ராஜா, மாணிக்கம் ஆகியோர் திருச்சி இரயில்வே காவல் நிலையத்திற்கு சென்று தனது தாயார் புகார் கொடுத்தார் என்றும், அதன் பின்னீடு எதிரி வசந்தியை கைது செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

iv) அசா.5 ராஜ்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 26.02.2015-ம் தேதி அன்று காலை 09.00 மணியளவில் தான் வெல்டிங் வேலை செய்து கொண்டிருக்கும் போது தனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி விபத்திற்குள்ளாகியதாக தகவல் வந்தது என்றும், தான் வேலை செய்யும் இடத்திலிருந்து நமணசமுத்திரம் சென்று பார்க்கும் போது தனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி இரயில்வே தண்டவாளத்தில் இறந்து

கிடந்தார் என்றும், தான் சம்பவம் சம்பந்தமாக வீட்டில் இருந்த தனது தாயார் மற்றும் அண்ணன் செந்தில்குமார் ஆகியோருக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன் என்றும், சொல்லிவிட்டு ஆம்புலன்சில் திருமயம் அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன் என்றும், தனது அண்ணனின் பிரேதத்தை சடலக் கூறாய்வு செய்து தங்கள் வசம் ஒப்படைத்து விட்டார்கள் என்றும், பின் சொந்த ஊருக்கு எடுத்து சென்று நல்லடக்கம் செய்ததாகவும், மனவருத்தத்தில் இரண்டு மாதங்கள் ஓடிவிட்டது என்றும், தனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி 12.05.2015 அன்று தனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை தனது தாயாரும் இரண்டு நபர்களும் சேர்ந்து கொலை செய்து இரயில்வே தண்டவாளத்தில் போட்டுவிட்டதாக சொன்னதாகவும், அதன்பின் இரண்டு நாட்கள் கழித்து அண்ணனின் 2வது மகள் அபிராமியும் தங்கள் வீட்டிற்கு வந்து விட்டதாகவும், தனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை 3வது எதிரி மற்ற இரண்டு எதிரிகளுடன் சேர்ந்து கொலை செய்ததாகவும், 15.05.2015 அன்று திருச்சியில் உள்ள காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தனது தாயார், தனது அண்ணன் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

v) அசா.7 கருப்பையா தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் நமணசமுத்திரத்திற்கு அருகே உள்ள வடக்குப்பட்டி கிராமத்தில் வசித்து வருவதாகவும், தான் இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று வீட்டில் வசித்து வருவதாகவும், கடந்த 26.04.2015ம் தேதி தனது அண்ணன் மகளான 3வது எதிரி வசந்தி காலை 08.00 மணியளவில் அழுது கொண்டு இருந்தது, தான் தனது மனைவி மற்றும் ஊர் மக்கள் ஓடிச் சென்று என்ன என்று விசாரித்தோம் என்றும்,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:36:40 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

வசந்தியின் கணவர் கிருஷ்ணமூர்த்தி ரயிலில் அடிபட்டு விட்டதாக கூறியதாகவும், அதன் பின்னீடு காவல் துறையினர் விசாரித்து திருமயம் அரசு மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தியின் உடலை எடுத்து சென்றார்கள் என்றும், பிரேத பரிசோதனைக்கு பின்னீடு கிருஷ்ணமூர்த்தியின் உடலை நல்லடக்கம் செய்ததாகவும், பின்னீடு 3 மாதங்கள் கழித்து தனது அண்ணன் மருமகன் கிருஷ்ணமூர்த்தி ரயிலில் அடிபட்டு இறக்கவில்லை என்றும், வசந்தி தான் ஆட்களை வைத்து கொன்றதாக கேள்விப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

vi) அசா.8 ஆறுமுகம் தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் நமணசமுத்திரம் அருகே உள்ள வடக்கிப்பட்டியில் வசித்து வருவதாகவும், தான் தேக்காட்டூர் பஞ்சாயத்து துணை தலைவராக இருந்ததாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், கடந்த 26.02.2015ம் தேதி காலை 08.00 மணிக்கு தான் வீட்டிலிருக்கும் போது இரயில் ரோட்டில் ஒரே கூட்டமாக இருந்தது சென்று பார்த்தபோது கிருஷ்ண மூர்த்தி ரயிலில் அடிபட்டு தலை நசுங்கி இறந்து கிடந்ததாகவும், வீட்டில் சண்டை என்பதால் இறந்து விட்டதாக பக்கத்திலிருந்தவர்கள் கூறினார்கள் என்றும், தான் கிருஷண்மூர்த்தியின் மகள்களான பவித்ரா, அன்புக்கரசி ஆகியோர்களை பள்ளியிலிருந்து சுமார் 12.00 மணியளவில் அழைத்து வந்ததாகவும், அதன் பிறகு கிருஷண்மூர்த்தியின் பிரேதத்தை திருமயம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு சென்றார்கள் என்றும், பிரேத பரிசோதனை முடிந்த பிறகு நல்லடக்கத்திற்காக ஊரணிபுரத்திற்கு கொண்டு சென்றார்கள் என்றும், அதன் பிறகு 3 மாதங்கள் கழித்து 24.05.2015 அன்று மாலை 05.00 மணியளவில் காவல் நிலையத்தில் தகவல் தந்து தன்னை அழைத்தார்கள் என்றும், அப்போது 3வது எதிரி

வசந்தி காவல் நிலையத்தில் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், வசந்தி, மூத்த மகள் அன்புக்கரசி, 1, 2 எதிரிகள் சேர்ந்து தான் கிருஷ்ணமூர்த்தியை அடித்துக் கொன்று இரயில்வே தண்டவாளத்தில் போட்டதாக வசந்தி கூறியதாகவும், அதன் பிறகு இரவு 08.00 மணிக்கு வசந்தியை கைது செய்து காவல்நிலையம் கொண்டு சென்றார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

vii) அசா.9 சந்தரகோபாலன் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், தான் தேக்காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவராக பணிபுரிந்து உள்ளதாகவும், 23.05.2015ந் தேதி காலை 10.00 மணியளவில் தான் தனது வீட்டில் இருக்கும்போது எதிரி வசந்தி தனது வீட்டிற்கு வந்தார் என்றும், வசந்தியின் வீட்டிற்கு சிலண்டர் போட வருபவருக்கும், எதிரி வசந்திக்கும் தொடர்பு இருந்ததாகவும் அதனால் எதிரிக்கும் எதிரியின் கணவருக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டு வந்ததாகவும் எதிரி வசந்தி கூறினார் என்றும், சிலிண்டர் போட வருபவர் எதிரிக்கு போன் செய்தால் எதிரியின் கணவரை கொலை செய்துவிடலாம் என கூறியதாக எதிரி வசந்தி கூறினார் என்றும், அவரையும் எதிரி ராஜா என்பவரையும் எதிரியின் வீட்டிற்குள் விட்டதாகவும், அவர்கள் வசந்தியின் கணவரை கொல்ல முயற்சித்ததாகவும், பிறகு கம்பியால் அடித்து எதிரியின் கணவரை கொலை செய்ததாகவும், வெளியே வந்து கணவரை கொலை செய்து விட்டு, தூக்கிக் கொண்டுபோய் இரயில்வே தண்டவாளத்தில் போட்டு விட்டு வந்ததாகவும் வசந்தி சொன்னார் என்றும், பின்னீடு காவல் துறையினர் விசாரித்தார்கள் என்றும், தானும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றதாகவும் சம்பவ இடமான இரயில்வே தண்டவாளத்திலிருந்து 100மீ தூரத்திலிருந்து அதிமுக

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:36:51 +0530

கட்சி வேஸ்டி ஒன்று இருந்தது என்றும், தன்னுடன் நடராஜன், சுப்பையா ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

viii) அசா.10 ஆறுமுகம் தனது சாட்சியத்தில் தான் தேக்காட்டூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வீட்டில் வசித்து வருவதாகவும், எதிரிகளை தெரியும் என்றும், 23.05.2015-ம் தேதி காலை 7.00 மணியளவில் தான் வீட்டிலிருக்கும் போது தேக்காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த சந்தரகோபாலன் என்பவர் தன்னை அவர் வீட்டிற்கு வரும்படி அலைபேசி மூலம் அழைத்தார் என்றும், தான் அவர் வீட்டிற்கு 7.30 மணியளவில் சென்றபோது அங்கு 3வது எதிரி வசந்தி, சுப்பையா, நடராஜன் ஆகியோர் இருந்தனர் என்றும், 3வது எதிரி வசந்தியின் கணவர் கிருஷ்ணமூர்த்தி தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும், 3வது எதிரி 1, 2 எதிரிகளுடன் சேர்ந்து அவரை கொலை செய்து விட்டதாக வாக்குமூலம் தர எதிரி வசந்தி வந்துள்ளதாக சொன்னார் என்றும், தானும் வசந்தியை விசாரித்தேன் என்றும், வசந்தி சந்தரகோபாலனிடம் கொடுத்த வாக்குமூலத்தையும் படித்துப் பார்த்து தானும் அதில் கையெழுத்து செய்தேன் என்றும், பிறகு வசந்தியை காரைக்குடியில் உள்ள இரயில்வே காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம் என்றும், அங்கே ஆய்வாளர் வசந்தியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், தலைவர் சந்தரகோபாலனும் கையெழுத்து செய்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

*ix)* அ.சா.13 நடராஜன் தனது சாட்சியத்தில் கடந்த 23.05.2015 காலையில் 06.00 மணியளவில் தேக்காட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் சந்தரகோபாலன் வீட்டில் தான் இருந்தேன் என்றும், அப்போது 3வது எதிரி வசந்தி அங்கு வந்து தலைவரிடம்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:36:59 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

விபரம் கூறினார் என்றும், 3வது எதிரி 1, 2 எதிரிகள் மற்றும் தனது மூத்த மகளுடன் சேர்ந்து தனது கணவர் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்த விபரத்தினை தலைவரிடம் கூறிக்கொண்டிருந்தார் என்றும், தான் அதை நேரில் கேட்டேன் என்றும், உடன் தலைவர் சந்தரகோபாலன், கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டார் என்றும், கிராம நிர்வாக அலுவலர் தேக்காட்டூர் பஞ்சாயத்திற்கு வந்துவிட்டார் என்றும், 3வது எதிரி வசந்தி கொலை சம்பந்தமாக தன்னிடம் கூறிய விபரங்களை தலைவர், கிராம நிர்வாக அலுவலரிடம் தெரிவித்தார் என்றும், சுமார் 08.30 மணியளவில் 09.00 மணிக்குள் தான், தலைவர் சந்தரகோபாலன், கிராம நிர்வாக அலுவலர், 3வது எதிரி வசந்தி ஆகியோர் காரைக்குடி இரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றும், தலைவர் சந்தரகோபாலன் காரைக்குடி ரயில்வே போலீசாரிடம் விபரங்கள் கூறி 3வது எதிரி வசந்தியை ஆஜர் செய்துவிட்டு தாங்கள் வந்துவிட்டோம் என்றும், மறுநாள் நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் நடந்த விபரங்களை 3வது எதிரி வசந்தி வாக்குமூலமாக கூறினார் என்றும், அப்போது தானும், தலைவர் சந்தரகோபாலனும் கிராம நிர்வாக அலுவலரும் உடன் இருந்தோம் என்றும், 3வது எதிரி வசந்தி வாக்குமூலம் கொடுத்த பின்னீடு 3வது எதிரி வசந்தியை போலீசார் கைது செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*x)* அ.சா.15 சரவணன் தனது சாட்சியத்தில் சம்பவம் சமயத்தில் தான் பொன்னமராவதியில் பணிபுரிந்து வந்தேன் என்றும், 3-வது எதிரி வசந்தியை மட்டும் தெரியும் என்றும், தான் இறந்து போன கிருஷ்ணமூர்த்தி வீட்டில் தான் குடியிருந்து வந்தேன் என்றும், 3வது எதிரி வசந்தி கிருஷ்ணமூர்த்தியின் மனைவி என்றும், தான் ரூ.1300 மாத வாடகைக்கு 8 மாதமாக குடியிருந்து வந்தேன் என்றும், 25-02-2015

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:37:05 +0530

அன்று தான் காலையில் வேலைக்கு சென்று விட்டு இரவு 9 முதல் 10 மணியளவில் வீட்டிற்கு வந்தேன் என்றும், வழக்கம் போல் தான் குளித்துவிட்டு சாப்பிட்டேன் என்றும், அப்பொழுது சத்தம் கேட்டது, தான் அது குறித்து கவனித்து கொள்ளவில்லை என்றும், தான் எப்பொழுதும் போல் தூங்கி விட்டு மறுநாள் வழக்கம் போல் வேலைக்கு சென்று விட்டேன் என்றும், 9.30 மணியளவில் தனக்கு வீட்டில் இருந்து போன் வந்தது என்றும், தான் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் இரயில் பாதையில் அடிப்பட்டு இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்தது என்றும், தான் தகவல் கிடைத்தவுடன் இரயில்வே பாதையில் வந்து பார்த்தேன் என்றும், இரயில்வே காவலர்கள் வந்திருந்தார்கள், பிரேத பரிசோதனைக்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தியின் உடலை கொண்டு போனார்கள் என்றும், பிரேத பரிசோதனை முடிந்த பின்னீடு கிருஷ்ணமூர்த்தி உடலை அவரது பெற்றோர்கள் பெற்றுக் கொண்டு அவரது ஊருக்கு கொண்டு போனார்கள் என்றும், தான் வீட்டிற்கு வந்து விட்டேன் என்றும், அதன் பின்னீடு 2 மாதங்கள் கழித்து கிருஷ்ணமூர்த்தியின் மரணம் கொலை என்றும் அவரை கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுவிட்டார்கள் என்று தான் கேள்விப்பட்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xi)* அ.சா.16 அருள்ராஜ் தனது சாட்சியத்தில், கடந்த 26.05.2015 அன்று தான் காரைக்குடி தாலுகா, இலுப்பக்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன் என்றும், 26.05.2015 அன்று காலை 08.00 மணியளவில் தானும் கிராம உதவியாளர் சரவணன் என்பவரும் தங்கள் அலுவலகத்தில் பணியிலிருந்த போது ராஜா என்ற பாரதிராஜா 21 வயது உள்ள நபர் தங்கள் அலுவலகத்தில் ஆஜராகி தன்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:37:10 +0530

மீது குற்ற எண்.19/2015 என்ற எண்ணில் வழக்கு உள்ளது என்றும், தன்னை போலீசார் தேடி வருகிறார்கள் என்றும், போலீசாரிடம் தான் பிடிபட்டால் தன்னை அடிப்பார்கள் என்றும், அதனால் தன் முன்பாக என்ன சம்பவம் நடந்தது என கூறினார் என்றும், தனக்கும் வீரசோழன் என்பவருக்கும் கேஸ் கம்பெனியில் பணிபுரியும் போது பழக்கம் ஏற்பட்டது என்றும் தான் சுதர்சனம் கல்லூரியில் பி.பி.ஏ 3ம் ஆண்டு படித்து வருவதாகவும், தன்னுடைய படிப்பு செலவிற்கு வீரசோழனிடம் வேலைக்கு சென்றதாகவும், மதுரையிலிருந்து கேஸ் சிலிண்டர்களை எடுத்து வந்து ஒவ்வொரு இடமாக சிலிண்டர்கள் சப்ளை செய்யும் போது நமனசமுத்திரத்தில் காவல் நிலையத்திற்கு எதிர்புறம் உள்ள அபிராமி ஸ்டோர் வசந்தி என்பவருக்கும், வீரசோழன் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டதாகவும், தானும் வீரசோழனுடன் சேர்ந்து அங்கு அடிக்கடி செல்வேன் என்றும், அப்போது வீரசோழனுக்கும், வசந்திக்கும் உறவு ஏற்பட்டது என்றும், தானும் வசந்தியுடன் அம்மா, அக்கா என்று பழகியதாகவும், வசந்தியின் மூத்த மகள் அன்புக்கரசியிடம் தனக்கு பழக்கம் ஏற்பட்டதாகவும், மூர்த்திக்கு இந்த விபரங்கள் தெரிய வந்தது என்றும், விபரம் தெரிந்த கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய மனைவி வசந்தியையும் மகள் அன்புக்கரசியையும் கண்டித்தார் என்றும், கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய கடை தேவைக்காக ஆம்னி கார் வைத்திருந்ததாகவும், அந்த ஆம்னி கார் மீது லாரியை மோதி கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், அந்த முயற்சி பலனளிக்கவில்லை என்றும், வீரசோழன், வசந்திக்கு ஒரு அழைபேசி வாங்கிக் கொடுத்தார் என்றும், 25.02.2015 அன்று வீரசோழன் வசந்தியிடம் உன் வீட்டுக்காரர் வந்தவுடன் ஒரு மிஸ்டு கால் கொடுத்தால் தாங்கள் அங்கு வந்து விடுவோம்

எனவும், 25.02.2015 அன்று இரவு 10.30 மணியளவில் நமணசமுத்திரத்தில் உள்ள வசந்தியின் கடையின் எதிரே வீரசோழன் லாரியை நிறுத்தினார் என்றும், அப்போது பாரதிராஜா உடன் இருந்ததாகவும், அப்போது சொன்னது போல் வசந்தி மிஸ்டு கால் கொடுத்ததாகவும், வீரசோழனும் பாரதிராஜாவும் வசந்தியின் வீட்டிற்குள் சென்றதாகவும், வீட்டின் வெளியே வசந்தியும் அன்புக்கரசியும் நின்று கொண்டிருந்ததாகவும், வீட்டின் உள்ளே வீரசோழனும், பாரதிராஜாவும் சென்றவுடன் கிருஷ்ணமூர்த்தி எழுந்து என்னை கொல்ல வருகிறார்கள் என காப்பாற்றுங்கள் என அபிராமி, பவித்ரா ஆகியோர்களின் பெயரை சொல்லி சத்தம் போட்டார் என்றும் பாரதிராஜாவாகிய தான் கிருஷ்ணமூர்த்தியின் இரண்டு கைகளையும் கட்டியதாகவும், கிருஷ்ணமூர்த்தி தலையில் தலையணையை வைத்து வீரசோழன் அமுக்கியதாகவும், தாங்கள் கையோடு லாரியிலிருந்து எடுத்து சென்றிருந்த இரும்பு லிவரை கொண்டு கிருஷ்ணமூர்த்தியின் தலையில் வீரசோழன் அடித்தார் என்றும், இரத்த வெள்ளத்தில் கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xii)* அ.சா.18 லின்வீஸ் தனது சாட்சியத்தில் கடந்த 2014-ம் ஆண்டிலிருந்து 2019-ம் ஆண்டு வரை தென்னக இரயில்வேயில் புதுக்கோட்டையை தலைநகரமாக கொண்டு நமணசமுத்திரம் இரயில்வே கேட் நம்பர் 386ல் பணிபுரிந்து வந்தேன் என்றும், 25.02.2015-ம் தேதி தான் இரவு 08.00 மணியிலிருந்து மறுநாள் 26.02.2015-ம் தேதி காலை 08.00 மணி வரை பணயிலிருந்தேன் என்றும், 26.02.2015 அன்று அதிகாலை 02.50 மணிக்கு ஸ்டேசன் மாஸ்டரிடமிருந்து தனக்கு கிடைத்த தகவலின்படி வாரணாசி இரயில் வருவதற்காக இரயில்வே கேட்டை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:37:21 +0530

அடைத்தேன் என்றும், 14259 இராமேஸ்வரம் வாரணாசி விரைவு ரயிலானது நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கடந்த புதுக்கோட்டையை நோக்கி சென்றது என்றும், தான் அன்று பணியிலிருந்தபோது காலை 07.45 மணியளவில் கீமேன் இளங்கோ என்பவர் தான் பணியிலிருந்த இரயில்வே கேட்டிற்கு வந்து கிலோமீட்டர் 464 / 1-2 ல் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் பிரேதம் இறந்துக் கிடப்பதாக கூறினார் என்றும், அந்த தகவலை இளங்கோ இரயில்வே மேலதிகாரிகளுக்கு கூறினார் என்றும், தான் தனது பணியை முடித்து ஓய்வெடுக்கச் சென்று விட்டேன் என்றும், காவல் துறை அதிகாரிகள் வந்து விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xiii)* அ.சா.19 செல்வராஜ் தனது சாட்சியத்தில், தான் தென்னக இரயில்வேயில் திருச்சியை தலைமையகமாக கொண்டு இரயில் வண்டியின் லோகோ பைலட்டாக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன் என்றும், கடந்த 25.02.2017-ம் தேதி 23.00 மணிக்கு இராமேஸ்வரத்திலிருந்து வாராணசி செல்லும் விரைவு வண்டியை திருச்சி வரை லோகோ பைலட்டாக இயக்கி சென்றேன் என்றும், உதவி லோகோ பைலட்டாக மிதுன் என்பவரும், வண்டியின் கார்டாக டேவிட் குமார் என்பவரும் பணியில் இருந்தார்கள் என்றும், அது விரைவு வண்டி, காரைக்குடிக்கு அடுத்த நிறுத்தம் புதுக்கோட்டை தான் என்றும், கடந்த 26.02.2015ம் தேதி அதிகாலை 2.50 மணியளவில் தான் இயக்கி சென்ற இரயில் நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கடந்து புதுக்கோட்டை இரயில்வே நிலையம் வந்து சேர்ந்தேன் என்றும், 75கி.மீ வேகத்தில் இரயிலை இயக்கி வந்ததாலும் இரவு நேரம் என்பதாலும் தான் இயக்கி வந்த இரயில் இன்ஜின் முன்பாக எதுவும்

அடிப்பட்டதாக தனக்கு தெரியவில்லை என்றும், காரைக்குடி இரயில்வே போலீசார் அன்றைய தினம் அதிகாலை 2.50 மணிக்கு நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கிராஸ் செய்த இரயிலை இயக்கியது தான் தானா என்று தன்னிடம் விசாரித்தார்கள் என்றும், தான் இயக்கி வந்த இரயிலை திருச்சியில் நிறுத்திவிட்டு ஓய்வில் சென்று விட்டோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xiv)* அ.சா.20 ரெங்கசாமி தனது சாட்சியத்தில் தனக்கு சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம், நமணசமுத்திரம் அருகில் உள்ள தேக்காட்டூர் என்றும், அங்கு கிராம உதவியாளராக பணியாற்றி கடந்த 2017-ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று சொந்த ஊரில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 2015-ம் ஆண்டில் தேக்காட்டூர் குரூப் கிராம உதவியாளராக பணியிலிருந்த போது கடந்த 23.05.2015-ம் தேதி சிவகங்கை மாவட்ட காரைக்குடி பகுதி இரயில்வே காவல்துறையினர் வரச் சொன்னதன் பேரில் நமணசமுத்திரத்தில் உள்ள இறந்த கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்கு வரச்சொல்லி வீட்டு பகுதியை ஒரு தாளில் படமாக வரைந்து கொண்டு பார்வை மகஜர் எழுதி தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் தானும், இளங்கோ என்பவரும் சாட்சியாக கையொப்பம் போட்டதாகவும், பார்வை மகஜரில் இளங்கோ என்பவரால் போடப்பட்ட 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.8 என்றும், அதன் பின் கடந்த 26.02.2015-ம் தேதி வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரயில்வே தண்டவாளப் பகுதியில் மகஜர் தயாரித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றும், பார்வைமகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.9 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xv)* அசா.21 மருத்துவர்.கண்ணன் தனது சாட்சியத்தில், தான் தற்போது

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:37:33 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 2015-ம் வருடம் திருமயம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது கடந்த 26.02.2015-ம் தேதி மதியம் 3.00 மணியளவில் கிருஷ்ணமூர்த்தி வயது 45 என்பவருடைய பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்ததாகவும், அப்போது மேற்படி நபருக்கு வெளிப்புற காயங்களான சிராய்ப்புக்காயம் 10$X$5செமீ அளவில் இடது தொடையில் காணப்பட்டது என்றும், வெட்டுக்காயமாக 10$x$2செமீ அளவில் இடது கண்ணத்தில் காணப்பட்டது என்றும், சிராய்ப்புக்காயம் 6$X$3செமீ அளவில் இடது புஜத்தில் காணப்பட்டது என்றும், 9$X$5செமீ அளவில் இடது முழங்கையிலும் காணப்பட்டது என்றும், இடது பக்க தலை எலும்பு அழுத்தப்பட்டு உடைந்த நிலையில் காணப்பட்டது என்றும், மேலும் உள்புற சோதனையின் போது இடது பக்க முழங்கை மற்றும் இடது பக்க மணிக்கட்டில் எலும்பு முறிவு காணப்பட்டது என்றும், மேலும் இடது பக்க எலும்பு முறிவு தலையில் காணப்பட்டது என்றும், மூளையின் இடது பக்க பகுதிகள் முற்றிலும் காணப்படவில்லை என்றும், மேலும் மேற்குறிப்பிட்ட நபர் இரயில் விபத்தில் இறந்தாரா அல்லது பிற நபர்கள் தாக்கிய காயங்களால் இறந்தாரா என விளக்குமாறு தன்னிடம் கருத்து கேட்கப்பட்ட போது மேற்கூறிய நபருக்கு ஏற்பட்ட காயங்கள் இரயிலில் அடிபட்டு ஏற்படுவதால் நிகழ்ந்திருக்கலாம் அல்லது தனி நபர்கள் ஆயுதங்களால் தாக்கியதாலும் நிகழ்ந்திருக்கலாம் என்று தான் கருத்துரை வழங்கினேன் என்றும், மேற்குறிப்பிட் நபரை கம்பியால் அடித்தால் தலைக்காயம் ஏற்பட்டு இறந்திருக்க வாய்ப்பு உள்ளது என்றும், சிலரால் அவருக்கு மூச்சு திணறலை ஏற்படுத்தும் நிகழ்வை செய்திருந்தால் அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றும், மேற்படி

பிரேத பரிசோதனைக்கு இருப்புப்பாதை சிறப்பு சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.10 என்றும், படிவம் 86 அ.சா.ஆ.11 என்றும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.12 என்றும், இது குறித்து காவல்துறையினர் கோரிய சந்தேகங்கள் அடங்கிய வினாவிற்கு வழங்கிய கருத்துருவுடன் கூடிய பதில் அ.சா.ஆ.13 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xvi)* அசா.22 கணேசன் தனது சாட்சியத்தில், தான் கடந்த 2019ல் இராமேஸ்வரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தேவகோட்டை அருகில் உள்ள தாணிச்சாவூரணியில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 2015ம் ஆண்டில் காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது 26.02.2015ம் தேதி காலை 8.30 மணியளவில் நமனசமுத்திரத்தை சேர்ந்த எதிரி வசந்தி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 19/2015 குவிமுச பிரிவு 174ன் கீழ் முதல் தகவல் அறிக்கை தயாரித்தேன் என்றும், 3-வது எதிரியான வசந்தி என்பவர் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.14 என்றும், அதன் அடிப்படையில் அவர் தயாரித்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.15 என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கையை வைத்து முதல்விசாரணையை துவங்கியதாகவும், முதலில் திருமயத்திற்கும் புதுக்கோட்டைக்கும் இடையில் உள்ள 464/1-2 என்ற ரயில்வே தடத்தில் உள்ள சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்தேன் என்றும், மேற்படி மாதிரிவரைபடம் அ.சா.ஆ.16 என்றும், பின்னர் சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்து இறந்த நபரின் உடலை வைக்கப்பட்டிருந்த

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:37:46 +0530

திருமயம் மருத்துவமனை சவக்கிடங்கில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன் என்றும், மேற்படி பிரேதவிசாரணை அறிக்கை அ.சா.ஆ.17 என்றும், இவ்வழக்கின் சாட்சிகளான வசந்தி, அன்புக்கரசி, அபிராமி, மாணிக்கம், கருப்பையா, ராஜ்குமார், ஆறுமுகம், நீலகண்டன், இளங்கோவன், ரெங்கசாமி, சிதம்பரம், சிங்கம்மாள், வள்ளியப்பன், ஆண்டியப்பன் மகன் ஆறுமுகம், அரங்குடலிங்கம் மற்றும் அய்யாகண்ணு ஆகியோர்களை விசாரித்து முதல்கட்ட விசாரணையாக தனித்தனியாக வாக்கு மூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் தனது வழக்கு விசாரணையில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி இரயிலில் அடிபட்டு இறக்கவில்லை என்றும், அவர் வீட்டில் வைத்து கொலை செய்து, பின்னர் தண்டவாளத்தில் போடப்பட்டுள்ளார் என தெரிய வந்ததால் வழக்குகோப்பை காவல்ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*xvii)* அசா.23 களஞ்சியம் தனது சாட்சியத்தில், தான் காரைக்குடி வடக்கு காவல்நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.07.2019-ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருவதாகவும், கடந்த 22.05.2015-ம் தேதி காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணியிலிருந்தபோது காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலைய குற்றஎண்.19/2015 பிரிவு 174 குவிமுச படி சிறப்பு சார்பு ஆய்வாளர் கணேசன் என்பவர் வழக்குகோப்பை ஒப்படைத்த நிலையில் இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் சிங்கம்மாள், பவித்ரா, அபிராமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், பின்னர் குற்ற எண். 19/2015

குவிமுச 174ன் படியான வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 120(*b*), 449, 302, 201, 342 *r/w* 34 *IPC* ன் படி பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றும், மேற்படி பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.18 என்றும், சாட்சிகள் சிங்கம்மாள், பவித்ரா, அபிராமி ஆகியோர்களை பிரிவு 164 குவிமுச படி வாக்குமூலம் பெறுவதற்கு வேண்டுகோள் கடிதம் பெற்றேன் என்றும், மேற்படி வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.19 என்றும், அதன் அடிப்படையில் தலைமைக் குற்றவியல் நீதிபதி அவர்களால் வழங்கப்பட்ட செயல்முறைக் கடிதம் அ.சா.ஆ.20 என்றும், இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க விருப்பப்பட்ட சிங்கம்மாள், பவித்ரா, அபிராமி ஆகியோர்கள் கடந்த 04.06.2015ல் திருப்பத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் தனித்தனியாக கொடுத்த பிரிவு 164 குவிமுச படியான வாக்குமூலங்கள் முறையே அ.சா.ஆ.21, 22, 23 என்றும், மேலும் ஊராட்சிமன்ற தலைவரிடம் 3-வது எதிரியான வசந்தி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை அறிக்கையாக சமர்பித்தேன் என்றும், மேற்படி அறிக்கை அ.சா.ஆ.24 என்றும், பின்னர் எதிரி வசந்தியுடன் இறந்த நபரின் வீட்டிற்கு சென்று சம்பவ இடத்தை பகல் 12.00 மணிக்கு பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.25 என்றும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளாக லூர்துசாமி மற்றும் ரெங்கசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 25.05.2015ம் தேதி காலை 9.00 மணிக்கு காரைக்குடி புதிய பேருந்து நிலையம் அருகில் இவ்வழக்கின் எதிரி இளவர்.அன்புக்கரசி என்பவரை பெண் காவலர் மூலம் கைது செய்து நிலையம் கொண்டு வந்து சிவகங்கை இளவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் 26.05.2015-ம் தேதி மதியம் 2.30 மணியளவில்

காரைக்குடி தாலுகா இழுப்பங்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலர் சரவணன் தானும், கிராம உதவியாளரும் பணியிலிருந்த போது ராஜா என்ற பாரதிராஜா என்ற எதிரி தன்னிடம் கொடுத்த தனிநபர் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி தனிநபர் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.26 என்றும், பின்னர் 26.05.2015 அன்று இவ்வழக்கின் 1வது எதிரி வீரசோழன் என்பவர் இந்த வழக்கில் திருத்துறைபூண்டி நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில் எதிரியை சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று சம்பவ இடத்தில் இருந்து எடுத்து ஒப்படைத்த சுமார் 73 செமீ நீளமுள்ள லேசாக வளைந்த இரும்புராடு கம்பியை அத்தாட்சியில் கைப்பற்றினேன் என்றும், பின்னர் 06.07.2015ல் சாட்சிகள் சரவணன், லீன்விஸ், காவலர் ராஜா, சிறப்பு சார்பு ஆய்வாளர் கணேசன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்றும், இவ்வழக்கில் கைப்பற்றிய சா.பொ.1 முதல் சா.பொ.6 வரையிலான பொருட்களை படிவம் 91 மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், மேற்படி படிவம் 91 முறையே அ.சா.ஆ.27, அ.சா.ஆ.28, அ.சா.ஆ.29 என்றும், இவ்வழக்கின் விசாரணையை 30.07.2015 அன்று முடித்து 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(*b*), 449, 302, 201-ன் படியும், 2-வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(*b*), 449, 302, 201, 342-ன் படியும், 3-வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(*b*), 302, 201, 203 *r/w* 34 *IPC* ன் படியும், இளவர் எதிரி மீது இதச பிரிவுகள் 120(*b*), 302, *r/w* 34 *IPC*-ன் படியும், மேற்குறிப்பிட்ட எதிரிகளில் இளவர் எதிரி மீதான குற்ற அறிக்கையை இளவர் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்தேன் என்றும், தனது விசாரணையில் சாட்சிகள் பவித்ரா, சிதம்பரம், வள்ளியப்பன், ஆறுமுகம், சுப்பையா, இளங்கோவன்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.16 18:38:02 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

ஆகியோர்கள் சொன்ன செய்திகளையே வாக்குமூலங்களாக பதிவு செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**6)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய பகுதிகள் பற்றி மேற்படி எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழ் தமிழில் விளக்கிக் கூறி வினவிய போது, மேற்படி எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் தங்களுக்குப் பாதகமாக தோன்றக் கூடிய பகுதிகளை பொய் என மறுத்துள்ளார்கள். மேலும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால், 1-வது, 2-வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302 மற்றும் 3-வது எதிரி மீது 120(பி), 449, 201, 203, 302-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8) பிரச்சனைக்கு தீர்வு:**

இவ்வழக்கில், 25.02.2015-ம் தேதி நமணசமுத்திரத்தில் மதுரை மெயின் ரோட்டில் உள்ள கிருஷ்ணமூர்த்தி வீட்டின் ஹாலில் தூங்கிக் கொண்டிருந்த போது ஏற்கனவே முடிவு செய்தபடி, இளஞ்சிறார் அன்புக்கரசி செல்போன் மூலம் 1-வது எதிரிக்கு மிஸ்டுகால் கொடுத்தும் 1-வது எதிரி கையில் இரும்பு கம்பியுடனும், 2-வது எதிரியும், 1-வது எதிரி அழைத்ததன் பேரில் அன்று இரவு சுமார் 10.45 மணிக்கு

வந்து கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, 1-வது எதிரி உறங்கிக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் தலையணையால் அமுக்கியும், 2-வது எதிரி கிருஷ்ணமூர்த்தியின் கால்களை எங்கும் நகரவிடாமல் பிடித்துக் கொண்டும், மீண்டும் 1-வது எதிரி இரும்புக் கம்பியால் கிருஷ்ணமூர்த்தியின் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தி கொலை செய்துள்ளார் என்றும், அப்போது 3-வது எதிரியும் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசியும் வீட்டின் கதவை வெளியில் பூட்டி ஆட்கள் யாரும் வருகிறார்களா என பார்த்துக் கொண்டு இருந்துள்ளார்கள் என்றும், மேற்படி 1 முதல் 3 எதிரிகளும் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து விட்டு மேற்படி குற்றத்திற்கான தண்டனையிலிருந்து மேற்படி எதிரிகளை மறைக்கும் உட்கருத்துடன் மேற்படி குற்றம் செய்யப்பட்டதற்கான சாட்சியத்தை மறைக்கும்படி வீட்டிலிருந்த கிருஷ்ணமூர்த்தியின் சடலத்தை மேற்படி 1 முதல் 3 எதிரிகளும் வீட்டிற்கு பின்னால் திருமயம் இரயில் நிலையத்திலிருந்து புதுக்கோட்டை இரயில் நிலையத்திற்கு இடையே கி.மீ.464/1-2 என்ற இடத்தில் போட்டும், அதன் பின்பு எதிரிகள் தாக்கியதால் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் தலையில் இருந்து வழிந்த இரத்தக்கரையை தண்ணீர் ஊற்றி வீட்டை கழுவி சுத்தம் செய்து தடயங்களை மறைத்தும், மேலும் 3-வது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து விட்டு மனநிலை சரியில்லாததால் இரயிலில் அடிபட்டு இறந்து விட்டதாக பொய்யான தகவலை கொடுத்துள்ளார் என்பதாக 1-வது, 2-வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302 மற்றும் 3-வது எதிரி மீது 120(பி), 449, 201, 203, 302-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:12 +0530

*16.04.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**9)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.23 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.29 வரையிலான ஆவணங்களும், அ.சா.பொ.1 முதல் 7 குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 சிங்கம்மாள் தன் மகன் கிருஷ்ண மூர்த்தி இரயிலில் அடிபட்டு இறந்துவிட்டதாக கேள்விபட்டு வந்து பார்த்தது பற்றியும், பின் 22.05.2015 அன்று தனது பேத்திகள் வந்து தன் மகனை எதிரிகள் மூவரும் அடித்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுவிட்டதாக கூறியதால் அதன் பேரில் புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.2 அபிராமி, அ.சா.3 பவித்ரா சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சிகள், அ.சா.4 செந்தில்குமார், அ.சா.5 ராஜ்குமார் மற்றும் அ.சா.6 சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தியின் இறப்பு பற்றியும், கொலை வழக்காக மாறிய விபரம் தெரிந்து கொண்டது பற்றியும் கூறும் சாட்சிகள், அ.சா.7 கருப்பையா, அ.சா.8 ஆறுமுகம், அ.சா.11 வள்ளியப்பன், அ.சா.12 ஆறுமுகம் ஆகியோர் இறந்த கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாமல் மலஜலம் கழிக்கச் சென்ற இடத்தில் இரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்தது பற்றி முதல் விசாரணையில் கூறியது பற்றியும், பின்பு இறந்த கிருஷ்ணமூர்த்தி 1 முதல் 3 எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகியோர்களால திட்டமிட்டு வீட்டில் வைத்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சிகள், அ.சா.9 சந்திரகோபாலன், அ.சா.10 ஆறுமுகம் 3-வது எதிரியை எழுத்து

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:18 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

மூலமான அறிக்கையுடன் நிலையத்தில் ஒப்படைத்தது பற்றியும், அத்தாட்சியில் கையொப்பம் இட்டது பற்றியும் கூறும் சாட்சிகள், அ.சா.13 நடராஜன், அ.சா.14 சுப்பையா ஆகியோர் எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகிய நான்கு பேர்களும் கிருஷ்ணமூர்த்தியை திட்டம் தீட்டி கொலை செய்தோம் என கொடுத்த வாக்குமூலத்தின்போது உடன் இருந்தது பற்றி கூறும் சாட்சிகள், அ.சா.15 சரவணன் கொலையுண்டு இறந்த கிருஷ்ணமூர்த்தியின் வாடகை வீட்டில் குடியிருந்த நபர் சம்பவ தினத்தன்று இரவு கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் அதிக சத்தம் கேட்டது பற்றியும், பின்பு கிருஷ்ணமூர்த்தி இரயில் தண்டவாளத்தில் இறந்து கிடந்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.16 அருள்ராஜ் ஒப்புதல் வாக்குமூலம் பற்றி கூறும் சாட்சி, அ.சா.17 இளங்கோவன் பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் கையொப்பமிட்டது பற்றி கூறும் சாட்சி, அ.சா.18 லின்வீஸ் நமணசமுத்திரம் இரயில்வே கேட்டில் 25.02.2015 அன்று இரவு பணியில் இருந்தது பற்றியும், மறுநாள் அதிகாலை 02.50 மணிக்கு வண்டி எண்.14259 இராமேஸ்வரம் - வாரணாசி செல்லும் விரைவு வண்டியானது கேட்டை கடந்து சென்ற விபரம் பற்றி கூறும் சாட்சி, அ.சா.19 செல்வராஜ் வண்டி எண்.14259 இராமேஸ்வரம் - வாரணாசி வரை செல்லும் விரைவு வண்டியை இயக்கி வந்தது பற்றியும், 26.02.2015 அன்று அதிகாலை 02.50 மணிக்கு வண்டியானது நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கடந்து சென்றது பற்றி கூறும் சாட்சி, அ.சா.20 ரெங்கசாமி பார்வைமகஜர் சாட்சி, அ.சா.21 கண்ணன், மருத்துவர் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் உடலை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கியது பற்றி கூறும் சாட்சி, அ.சா.22 கணேசன் சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.1 கொடுத்த புகார் மனுவை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:27 +0530

பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, பிரேத விசாரணை மேற்கொண்டது பற்றியும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த விபரம் பற்றியும், வழக்கை மேல்விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு அனுப்பியது பற்றி கூறும் சாட்சி, அ.சா.23 களஞ்சியம் வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தது, எதிரிகளின் கைது, வழக்கு சொத்து கைப்பற்றியது பற்றியும், சாட்சிகள் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஆவார்.

**10)** இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தையும் ஒருசேர சீராய்வு செய்து பார்க்கையில் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் மகள் சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாக சாட்சியம் அளித்திருந்த போதிலும் அவர் உடனடியாக அது பற்றி யாரிடமும் சொல்லவில்லை. மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து ஏறக்குறைய மூன்று மாதங்கள் கழித்துதான் தன் தாத்தா, பாட்டியிடம் வழக்குச் சம்பவத்தை பற்றி சொன்னதாக அவர் தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மேற்படி மூன்று மாதகாலமும் எதிரிகள் தன்னை மிரட்டினார்கள் அதனால் சொல்லவில்லை என்றும், சம்பவம் நடந்த உடனே போலீசார் வந்த பொழுதும் தன்னை எதிரிகள் மிரட்டியதால் சொல்லவில்லை என்றும் அவர் கூறுவது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. அதேபோல் இவ்வழக்கில் உள்ள எதிரிகளிடம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:32 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

நீதிமன்றத்திற்கு அப்பால் பெறப்பட்ட வாக்குமூலம் (*Extra Judicial Confession*) கிராம நிர்வாக அதிகாரி மற்றும் பஞ்சாயத்து தலைவரிடம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் எதிரிகளை அடையாளம் கண்டு போலீசார் கைது செய்ததாகவும் கூறியுள்ளார்கள். ஆனால் இந்த வழக்கை பொறுத்த வரையில் சம்பவம் நடந்து ஏறக்குறைய 3 மாதங்கள் கழித்து இந்த வழக்கு புகார் பெறப்பட்டுள்ள நிலையில், மேற்படி சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களோ அல்லது பொருட்களோ அதாவது இரத்தக்கறை படிந்த அல்லது இரத்தக்கறை படியாத துணி போன்றவைகளை சம்பவம் நடைபெற்ற இடத்தில் அவர்கள் விட்டுச் சென்றதாகவும், அவைகள் மூன்று மாதங்களாக அதே இடத்தில் இருந்தது எனக் கூறுவது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. உதாரணமாக இறந்து போன நபர் அணிந்திருந்த வேஷ்டி அவர்கள் போட்டு சென்ற இடத்திலேயே மூன்று மாதங்களாக கிடந்ததாக கூறுவது நடைமுறையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில் சம்பவத்தில் கொலையுண்டு இறந்து போன நபரின் உடலானது இரயில்வே பாதையில் போடப்பட்டதாக அரசு தரப்பு வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அதற்கு அருகில் உள்ள முட்புதரில் வேஷ்டி போடப்பட்டதாகவும், அதை எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றியதாகவும் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. அதாவது மூன்று மாதங்கள் கழித்து அதே இடத்திலிருந்து அந்த துணிகள் கைப்பற்றப்பட்டதாக கூறுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:39 +0530

*16.04.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

11) மேலும், இவ்வழக்கில் இரத்தகறை படிந்த துணிகளையும், கொலையுண்டு இறந்து போன நபரின் உடலில் உள்ள இரத்தத்தையும் பரிசோதனை செய்து, மேற்படி இரும்பு ராடு மற்றும் இரத்தகறை படிந்த ஆடைகளில் உள்ள இரத்தம் இறந்து போன நபரின் இரத்தம்தான் என்பதையும் அரசு தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே (*Extra Judicial Confession*) அதாவது எதிரிகள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பஞ்சாயத்து தலைவர்களிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் நம்பத்தகுந்ததாக இல்லை என்றே நீதிமன்றம் கருதுகிறது.

12) அடுத்தபடியாக மிக முக்கியமாக இவ்வழக்கில் கொலையுண்டு இறந்து போன நபரை இந்த எதிரிகள் இரும்பு ராடால் அடித்ததாலும், தலையணையை வைத்து முகத்தில் அமுக்கியதாலும், மூச்சுதிணறியும் இரத்தப்போக்கு காரணமாகவும் தான் இறந்தார் என்பதை எந்த ஒரு ஆணித்தரமான மருத்துவ சாட்சியங்கள் மூலமும், சான்றாவனங்கள் மூலமும் அறிவியல் பூர்வமாக அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. இவ்வழக்கில் அ.சா.21 மருத்துவர், தன்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் இரயிலில் அடிபட்டதால்தான் கிருஷ்ணமூர்த்தி இறந்தார் என முதலில் கொடுத்துவிட்டு, அதற்கு அடுத்து புலன் விசாரணை அதிகாரி கேட்ட சந்தேகங்களுக்கு தான் அளித்த அ.சா.ஆ.13 பதில் அறிக்கையில் இப்படியும், அதாவது இரயிலில் அடிபட்டும் இறந்திருக்கலாம், ஆயுதத்தால் தாக்கியதாலும் இறந்திருக்கலாம் என மேம்போக்காக பதில் அளித்துள்ளார். ஏனெனில் இவ்வழக்கில் இறந்து போன நபரை சம்பவம் நடைபெற்ற அதாவது அவர் இறந்த அடுத்த நாளே எரித்து விட்டார்கள்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:48 +0530

*16.04.2026*                                                    முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

அவர் உடலை எரித்ததற்கு பின்னிட்டு ஏறக்குறைய மூன்று மாதங்கள் கழித்துதான் இந்த கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு பின்னிட்டு தான் இந்த சாட்சிகள் எல்லாம் விசாரிக்கப்பட்டு உள்ளார்கள். அப்படி இருக்கும் பொழுது மருத்துவர் பிரேதத்தை பார்க்காமலும், சம்பந்தப்பட்ட ஆயுதங்களை பார்க்காமலும் கண்டிப்பாக இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதத்தால் ஏற்பட்ட காயங்களின் காரணமாக மேற்படி நபர் இறந்தார் என எந்த ஒரு கருத்தும் கூற இயலாது. எனவே மருத்துவர் தனது கற்பனையாக கூறியுள்ள சங்கதிகளை மட்டும் வைத்துக் கொண்டு இந்த எதிரிகள் ஆயுதத்தால் தாக்கி மேற்படி நபரை கொலை செய்தார்கள் என திட்ட வட்டமாக முடிவு செய்ய இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

13) எனவே, மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த சாட்சியங்களின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது இந்த எதிரிகள்தான் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்து போன நபரை இரும்பு ராடால் தாக்கப்பட்டும், தலையணையால் முகத்தில் வைத்து அமுக்கப்பட்டும் தான் இறந்தார் என 1-வது, 2-வது எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302 மற்றும் 3-வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள 120(பி), 449, 201, 203, 302-ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு வழங்கி மேற்படி எதிரிகளை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:38:55 +0530

விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்றும் தீர்மானித்து, அவ்வாறே இந்தப் பிரச்சனைக்கு விடை காணப்படுகிறது.

***இறுதியாக,*** 1-வது, 2-வது எதிரிகள் இதச பிரிவுகள் 120(பி), 449, 201, 302-ன் கீழும் மற்றும் 3-வது எதிரி 120(பி), 449, 201, 203, 302-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் P.R.No.16/2025-ல் அ.சா.பொ-1 முதல் அ.சா.பொ.7-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருட்கள் பயனற்றவை என்பதால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்போ அல்லது மேல்முறையீடு இருப்பின் அதன் முடிவிற்கு பின்போ அழிக்கப்பட வேண்டுமென்றும், எதிரிகள் ஏற்கனவே எழுதிக் கொடுத்த பிணை முறிகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:01 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**
**திருவாளர்கள்.**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை. | சாட்சிகளின் பெயர் | சாட்சிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | சிங்கம்மாள் | தன் மகன் கிருஷ்ணமூர்த்தி இரயிலில் அடிபட்டு இறந்து விட்டதாக கேள்விபட்டு வந்து பார்த்தது பற்றியும், பின் 22.05.2015 அன்று தனது பேத்திகள் வந்து தன் மகனை எதிரிகள் மூவரும் அடித்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுவிட்டதாக கூறியதால் அதன் பேரில் புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.2 | அபிராமி. | சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.3 | பவித்ரா. | சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சி |
| அ.சா.4 | செந்தில்குமார். | கிருஷ்ணமூர்த்தியின் இறப்பு பற்றியும், கொலை வழக்காக மாறிய விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.5 | ராஜ்குமார். | கிருஷ்ணமூர்த்தியின் இறப்பு பற்றியும், கொலை வழக்காக மாறிய விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.6 | சிதம்பரம். | கிருஷ்ணமூர்த்தியின் இறப்பு பற்றியும், கொலை வழக்காக மாறிய விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.7 | கருப்பையா. | இறந்த கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாமல் மலஜலம் கழிக்கச் சென்ற இடத்தில் இரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்தது பற்றி முதல் விசாரணையில் கூறியது பற்றியும், பின்பு இறந்த கிருஷ்ணமூர்த்தி 1 முதல் 3 எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகியோர்களால திட்டமிட்டு வீட்டில் வைத்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:07 +0530

*16.04.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | | |
|---|---|---|
| அ.சா.8 | ஆறுமுகம். | இறந்த கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாமல் மலஜலம் கழிக்கச் சென்ற இடத்தில் இரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்தது பற்றி முதல் விசாரணையில் கூறியது பற்றியும், பின்பு இறந்த கிருஷ்ணமூர்த்தி 1 முதல் 3 எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகியோர்களால் திட்டமிட்டு வீட்டில் வைத்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.9 | சந்திரகோபாலன். | 3-வது எதிரியை எழுத்துமூலமான அறிக்கையுடன் நிலையத்தில் ஒப்படைத்தது பற்றியும், அத்தாட்சியில் கையொப்பம் இட்டது பற்றியும் கூறும் சாட்சி. |
| அ.சா.10 | ஆறுமுகம். | 3-வது எதிரியை எழுத்துமூலமான அறிக்கையுடன் நிலையத்தில் ஒப்படைத்தது பற்றியும், அத்தாட்சியில் கையொப்பம் இட்டது பற்றியும் கூறும் சாட்சி. |
| அ.சா.11 | வள்ளியப்பன். | இறந்த கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாமல் மலஜலம் கழிக்கச் சென்ற இடத்தில் இரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்தது பற்றி முதல் விசாரணையில் கூறியது பற்றியும், பின்பு இறந்த கிருஷ்ணமூர்த்தி 1 முதல் 3 எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகியோர்களால் திட்டமிட்டு வீட்டில் வைத்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.12 | ஆறுமுகம். | இறந்த கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாமல் மலஜலம் கழிக்கச் சென்ற இடத்தில் இரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்தது பற்றி முதல் விசாரணையில் கூறியது பற்றியும், பின்பு இறந்த கிருஷ்ணமூர்த்தி 1 முதல் 3 எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகியோர்களால் திட்டமிட்டு வீட்டில் வைத்து கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.13 | நடராஜன். | எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகிய நான்கு பேர்களும் கிருஷ்ணமூர்த்தியை திட்டம் தீட்டி கொலை செய்தோம் என கொடுத்த வாக்கு மூலத்தின்போது உடன் இருந்தது பற்றி கூறும் சாட்சி. |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:13 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | | |
|---|---|---|
| அ.சா.14 | சுப்பையா. | எதிரிகள் மற்றும் இளஞ்சிறார் அன்புக்கரசி ஆகிய நான்கு பேர்களும் கிருஷ்ணமூர்த்தியை திட்டம் தீட்டி கொலை செய்தோம் என கொடுத்த வாக்கு மூலத்தின்போது உடன் இருந்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.15 | சரவணன். | கொலையுண்டு இறந்த கிருஷ்ணமூர்த்தியின் வாடகை வீட்டில் குடியிருந்த நபர் சம்பவ தினத்தன்று இரவு கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் அதிக சத்தம் கேட்டது பற்றியும், பின்பு கிருஷ்ண மூர்த்தி இரயில் தண்டவாளத்தில் இறந்து கிடந்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.16 | அருள்ராஜ். | ஒப்புதல் வாக்குமூல சாட்சி. |
| அ.சா.17 | இளங்கோவன். | மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் கையொப்பமிட்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.18 | லின்வீஸ். | நமணசமுத்திரம் இரயில்வே கேட்டில் 25.02.2015 அன்று இரவு பணியில் இருந்தது பற்றியும், மறுநாள் அதிகாலை 02.50 மணிக்கு வண்டி எண்.14259 இராமேஸ்வரம் - வாரணாசி செல்லும் விரைவு வண்டியானது கேட்டை கடந்து சென்ற விபரம் பற்றி கூறும் சாட்சி, |
| அ.சா.19 | செல்வராஜ். | வண்டி எண்.14259 இராமேஸ்வரம் - வாரணாசி வரை செல்லும் விரைவு வண்டியை இயக்கி வந்தது பற்றியும், 26.02.2015 அன்று அதிகாலை 02.50 மணிக்கு மேற்படி வண்டியானது நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கடந்து சென்றது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.20 | ரெங்கசாமி. | பார்வை மகஜர் சாட்சி. |
| அ.சா.21 | *Dr*.கண்ணன். | இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் உடலை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கியது பற்றி கூறும் சாட்சி, |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:19 +0530

*16.04.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | | |
|---|---|---|
| அ.சா.22 | கணேசன்,<br>சிறப்பு சார்பு ஆய்வாளர். | அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, பிரேத விசாரணை மேற்கொண்டது பற்றியும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த விபரம் பற்றியும், வழக்கை மேல்விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு அனுப்பியது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.23 | களஞ்சியம்,<br>காவல் ஆய்வாளர். | வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தது, எதிரிகளின் கைது, வழக்கு சொத்து கைப்பற்றியது பற்றியும், சாட்சிகள் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| **சான்றாவணங்களின் வரிசை.** | **சான்றாவணங்களின் விபரம்.** | **சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம்.** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | அத்தாட்சி. | அ.சா.9 |
| அ.சா.ஆ.3 | 3-வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.9 |
| அ.சா.ஆ.4 | 2-வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.16 |
| அ.சா.ஆ.5 | அத்தாட்சி (பெஞ்ச்) | அ.சா.16 |
| அ.சா.ஆ.6 | 1-வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.16 |
| அ.சா.ஆ.7 | அத்தாட்சி (லிவர்) | அ.சா.16 |
| அ.சா.ஆ.8 | பார்வை மகஜர்(23.08.2022) | அ.சா.20 |
| அ.சா.ஆ.9 | பார்வை மகஜர்(26.02.2015) | அ.சா.20 |
| அ.சா.ஆ.10 | பிரேத விசாரணை வேண்டுகோள் கடிதம். | அ.சா.21 |
| அ.சா.ஆ.11 | படிவம்-86 | அ.சா.21 |
| அ.சா.ஆ.12 | பிரேத பரிசோதனை அறிக்கை. | அ.சா.21. |
| அ.சா.ஆ.13 | மருத்துவ சந்தேகங்களுக்கான கருத்து. | அ.சா.21 |
| அ.சா.ஆ.14 | வசந்தி கொடுத்த புகார். | அ.சா.22 |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:25 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.15 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.22 |
| அ.சா.ஆ.16 | மாதிரி வரைபடம்(26.02.2015). | அ.சா.22 |
| அ.சா.ஆ.17 | பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா.22. |
| அ.சா.ஆ.18 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.23 |
| அ.சா.ஆ.19 | பிரிவு 164 வாக்குமூலங்களுக்கான வேண்டுகோள் கடிதம். | அ.சா.23. |
| அ.சா.ஆ.20 | தலைமை நீதித்துறை நடுவர் பிறப்பித்த உத்தரவு. | அ.சா.23. |
| அ.சா.ஆ.21 | சிங்கம்மாள் கொடுத்த 164 வாக்குமூலம். | அ.சா.23 |
| அ.சா.ஆ.22 | பவித்ரா கொடுத்த 164 வாக்குமூலம். | அ.சா.23 |
| அ.சா.ஆ.23 | அபிராமி கொடுத்த 164 வாக்குமூலம். | அ.சா.23 |
| அ.சா.ஆ.24 | சந்திரகோபாலன் வசம் 3-வது எதிரி கொடுத்த வாக்குமூலம். | அ.சா.23. |
| அ.சா.ஆ.25 | மாதிரி வரைபடம் (23.08.2022) | அ.சா.23 |
| அ.சா.ஆ.26 | கிராம நிர்வாக அலுவலரிடம் 2-வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.23 |
| அ.சா.ஆ.27 | படிவம்-91. | அ.சா.23 |
| அ.சா.ஆ.28 | படிவம்-91. | அ.சா.23 |
| அ.சா.ஆ.29 | படிவம்-91. | அ.சா.23 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:**

| சான்று பொருட்களின் வரிசை | சான்று பொருட்களின் விபரம். | சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம். |
|---|---|---|
| அ.சா.பொ.1 | இரும்பு ராடு. | அ.சா.2 |
| அ.சா.பொ.2 | தலையணை. | அ.சா.2 |
| அ.சா.பொ.3 | வேஷ்டி. | அ.சா.2 |
| அ.சா.பொ.4 | சட்டை. | அ.சா.2 |
| அ.சா.பொ.5 | துப்பட்டா. | அ.சா.2 |
| அ.சா.பொ.6 | மரபெஞ்ச். | அ.சா.2 |
| அ.சா.பொ.7 | லிவர். | அ.சா.16 |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:30 +0530

*16.04.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:-** இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.16 18:39:37 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,

சிவகங்கை.

**அமர்வு வழக்கு எண்.09/2017**

வரைவு - சீரான / தீர்ப்புரை

நாள்: 16.04.2026